ஞானகுருவின் படைப்புக்கள்

# இ.ம.இ.யும், இ.மு.க.வுமே முழுமையான பண்பாட்டுப் புரட்சியை மலரச் செய்யும்.



அன்பு மகனே! நாம், நமது செயல்கள் அனைத்தையும் அன்பு வழியில், அருள் வழியில், அற வழியில், அமைதி வழியில், சமாதானப் போக்கில், விஞ்ஞானச் சூழலில், பகுத்தறிவு அணுகுமுறையில்தான் நிகழ்த்துவோம், நிகழ்த்துவோம், நிகழ்த்துவோம்.

அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,125 சித்திரை மாதம்

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**தலைப்பு:** "இ.ம.இ.யும், இ.மு.க.வுமே முழுமையான பண்பாட்டுப் புரட்சியை மலரச் செய்யும்."

# உள்ளுறை


1. **"சித்தர் கருவூரார் அருட்பணி விரிவாக்கத் திட்டம்"** - தாராசுரம் ஊரைச் சேர்ந்த அறிமுகத்தாருக்கு குருதேவர் விடுத்த மடல்; மந்திரவாதிப் பாதிப்புக்களுக்கு எளிய முறையில் பரிகாரங்கள் செய்து தரும் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில் இணைந்து செயல்பட அழைப்பு விடுத்து வரைந்த மடல்.
2. **"இ.மு.க. ஒரு சமுதாயச் சீர்திருத்தக் கழகம்"** - பாபநாசத்தைச் சேர்ந்த அடியான் ஒருவருக்கு சுற்றுப்பயணத்தின் போது செய்யப்பட வேண்டியவைகளை தத்துவ ரீதியாக விளக்கி குருதேவர் எழுதிய மடல்.
3. **"தமிழைப் பற்றிய ஒரு மின்னல் கீற்று வரலாற்றுச் செய்தி."** - பகுத்தறிவுப் பாரம்பரியத்தினர் ஒருவரின் வாரிசாக உள்ளவருக்கு இன்றைய காலக்கட்டத்தில் அவர் செயல்பட வேண்டிய அவசியத்தை உணர்த்தி குருதேவர் எழுதிய மடல்.
4. **"Gurudevar's Letter to a Disciple from Andhra"** - ஆந்திர மாநிலத்திலிருந்து தம்மிடம் தொடர்பு கொண்டவருக்கு குருதேவர் ஆங்கிலத்தில் எழுதிய அஞ்சல்.
5. **"நான்வேத வாசகங்கள்"** - சித்தர்நெறியாளர்கள் அனைவரும் மனப்பாடம் செய்து கொண்டு மேடைகளிலும், அன்றாட வாழ்விலும் பயன்படுத்த வேண்டிய வாசகங்கள் என்று அனைவருக்கும் அனுப்பப்பட்ட 65 வாசகங்கள்.
6. **"இந்து முன்னேற்றக் கழகம் - அறிவிக்கை எண்: 3333"** - இந்துவேத மாநாட்டின் போது வழங்கப்பட்ட அறிவிக்கைகளில் ஒன்று.
7. **"27.5.92இல் நிகழ்ந்த பயிற்சி முகாமில் குருதேவர் அருளியது"** - குருதேவர் அருளியதைக் கேட்டு மாணக்கர்கள் எழுதி வைத்த குறிப்பிலிருந்து எடுத்து வழங்கப்படுபவை.

# <u>சித்தர் கருவூரூர் அருட்பணி விரிவாக்கத் திட்டம்</u>

பெறுநர்: R. சுந்தரேசன், டைலர், I.T.L.
திருமஞ்சன வீதி,
தாராசுரம் - 612702.

பொன்னேரி,
31-3-92.

1. பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய தையல் கலைஞர், காங்கிரசு பேரியக்கச் செயல்வீரர், இந்துமதப் பற்றுளர் சுந்தரேசன் I.T.L. அவர்களுக்கு;

பதினெண்சித்தர் மட அலுவலகத்திலிருந்து, குருதேவர், ஞானாச்சாரியார் திருவாய் மலர்ந்தருளிய பதிலை எழுதியனுப்புகிறோம்.

2. தங்கள் குடும்பத்தில் மந்திரவாதிகளால் ஏவல், செய்வினை, சூன்யம் செய்யப்பட்டுள்ளன. இதற்காக பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்த்தால்தான் முழுமையாக நலப்படுத்த இயலும். இதற்கு முடிகயிறு, தாயத்து, சக்கரங்கள் தர வேண்டியிருக்கும். அவற்றை 8 நாட்களுக்கு ஒருமுறை சுடுகாட்டிலோ, ஓடும் நீரிலோ போட்டுவிட்டு புதிதாக மாற்றிக் கொள்ள வேண்டும். நான்கு அல்லது எட்டு முறை மாற்ற வேண்டியிருக்கும். பதினெண்சித்தர்கள் தமிழில் வழங்கிய இந்து வேதத்தில்தான் இப்படி எளிமையான பரிகாரங்கள் இருக்கின்றன.

3. அன்புடையீர்! <u>தங்கள் குடும்பத்தில் மந்திரவாதிப் பாதிப்பு ஏற்பட்டிருப்பது போல்தான் மாற்று மதத்து மந்திரவாதிகளாலும், வேற்றுமொழி மந்திரவாதிகளாலும்</u>, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் எல்லையில்லா தொல்லைகளையும், துன்பங்களையும் அநுபவித்துக் கொண்டு

வருகின்றனர். இதை நம் காலத்திலாவது தடுத்தாக வேண்டும், தடுத்தாக வேண்டும், தடுத்தாக வேண்டும், தடுத்தேயாக வேண்டும். இதற்கு உங்களைப் போன்றவர்களால்தான் உதவி செய்ய முடியும்.

4. அதாவது, தந்தை பெரியார் அவர்கள் பிருமணர்கள் மீதும், சமசுக்கிருத மொழி மீதும், அவர்களுடைய ஹிந்து தர்மத்தின் மீதும் கொண்டுள்ள வெறுப்பினால் அவசரப்பட்டு "மூட்டைப் பூச்சிக்காக வீட்டையே கொளுத்தியது போல்" தமிழர்களாகிய பதினெண்சித்தர்கள் தமிழ்மொழியில் வழங்கிய இந்து வேதத்தின் மூலம் மக்களைப் பாதுகாப்பதற்காக ஏற்பாடு செய்திருந்த கோயில்கள், பூசைகள், அருளாடுதல், மருளாடுதல், தீச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், மந்திரவாதிப் பாதிப்புக்களைத் தடுத்தல் ... முதலிய அனைத்தையும் எதிர்த்து விட்டார், மறுத்து விட்டார், இல்லையென்று கூறிவிட்டார்.

இதனால், மாற்று மத மந்திரவாதிகளும், வேற்று மொழி மந்திரவாதிகளும், பேராசை பிடித்த நமது மத, மொழி மந்திரவாதிகளும் அன்றாடம் இரவுபகலாக சுடுகாடுகளிலும், புதைகாடுகளிலும், பாழடைந்த கோயில்களிலும் உட்கார்ந்து பயங்கரமான, கொடுமையான, அநீதியான, இழிவான மந்திரப் பூசைகளையெல்லாம் செய்து 1. காற்று, 2. கருப்பு, 3. பேய், 4. பிசாசு, 5. பில்லி, 6. சூன்யம், 7. ஏவல், 8. செய்வினை, 9. வைப்பு, 10. கழிப்பு, 11. மருந்து, 12. கண்ணேறு எனும் பன்னிரண்டையும் பயன்படுத்தி கிராமம் கிராமமாக, ஊர் ஊராகச் சென்று நமது அப்பாவி மக்களை மிகவும் தொல்லைப்படுத்தி வருகிறார்கள், துன்பப்படுத்தி வருகிறார்கள். இதுதான் உண்மை, உண்மை, உண்மை.

5. இந்த உண்மையைத் தெரியாமல், தி. க. வினர் கண்மூடித்தனமாக பிருமணர்களையும், ஹிந்துமதத்தையும் எதிர்ப்பதாக நினைத்துக் கொண்டு பெரிய மந்திரவாதிகளை வாழ வைத்துக் கொண்டு, வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இழிவை, அழிவை, அக்கிரமத்தை, அநீதியை, கொடுமையை, நம் மக்களின் துன்பத்தைப்

போக்குவதற்காகத்தான் நமது அருட்கொடை வள்ளல் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் **"சித்தர் கருவூரார் அருட்பணி விரிவாக்கத் திட்டம்"** என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி; இளைஞர், முதியோர், ஆண்பெண் வேறுபாடின்றி பொதுமக்களுக்கு உண்மையிலேயே தொண்டு செய்ய வேண்டும் என்ற உணர்வு உள்ளவர்களுக்கெல்லாம்

(அ) இந்துவேத பாடசாலை மூலமாகவும்,

(ஆ) பதினெண்சித்தர் மட அறக்கட்டளை மூலமாகவும்,

(இ) பதினெண்சித்தர் திருச்சபை மூலமாகவும்,

(ஈ) இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலமாகவும்

அவசர அவசியமாக குறுகிய காலப் பயிற்சிகளை வழங்கி சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் ஆகியோரைத் தயாரித்து அவரவர்களுடைய ஊழ்வினை, விதி, குலதெய்வ வலிமை, அக்கறை, ஆர்வம் முதலியவைகளுக்கேற்ப சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், பண்டாரம், பீடம், ஆச்சாரியார், பீடாதிபதி, மடாதிபதி ... எனும் 48 வகைப் பட்டங்களில் சில பட்டங்களை வழங்கி அருளுலகச் செயல்வீரர்களை உருவாக்குகிறார்.

இந்த அருளுலகச் செயல்வீரர்கள் அவரவர் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப பல இடங்களில் யாகசாலைகளை வைத்து சித்தர் கருவூரார் அருட்கோட்டங்களை உருவாக்கி வாரத்தில் சில நாட்களில் அல்லது வாரம் முழுவதும் யாகம் வளர்த்துப் பூசை செய்து பொதுமக்களுக்கு மந்திரித்து எல்லா பாதிப்புக்களுக்கும் பரிகாரம் செய்வதற்கும்; பாதிப்பு வராமல் முன்கூட்டியே தடுத்துக் கொள்வதற்குத் தேவையான 1. முடிகயிறு, 2. தாயத்து, 3. உருத்திராக்கம், 4. சக்கரம் எனும் நான்கையும் மிகமிகக் குறைந்த செலவில் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்துள்ளார் நமது அருட்கொடை வள்ளல், ஞானாச்சாரியார். ஏனென்றால், நமது குருதேவர்தான் இந்துமதத்

தந்தை, இந்துவேத நாயகம், இந்துவேத பீடம், நிறையக்ஞர், பரபிறம்மம், .... எனும் பல உரிமைகளுக்கும், பெருமைகளுக்கும் உரியவராக விளங்குகிறுர், விளங்குகிறுர், விளங்குகிறுர்.

6. இப்பேருண்மைகளேயெல்லாம் உணர்ந்து தங்களேப் போன்றவர்கள் விரைந்து இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர்ந்து பதினெண்சித்தர் மடத்தில் பயிற்சி பெற்று நம்முடைய மக்களுக்கு அருட் தொண்டாற்ற வேண்டும், அருட் தொண்டாற்ற வேண்டும், அருட் தொண்டாற்ற வேண்டும்.

7. இந்துவேதம், இந்துமதம், தமிழ்மொழி, தமிழ்நாடு முதலியவைகள் அனேத்தும் கடவுட் தன்மையுடையவை, தெய்வீகத் தன்மையுடையவை, தேவநிலேயைப் பெற்றவை என்று கூறிக் கொண்டு மாற்று மதத்தவர்களின் கோயில்களுக்குச் சென்று கும்பிடுவதும், மாற்று மதத்தவர்களிடம் மந்திரித்துக் கொள்வதும், மாற்று மதங்களுக்கு மாறிக் கொண்டிருப்பதும், மாற்று நாடுகளுக்கு ஓடிச் சென்று அடிமை வாழ்வு வாழ்வதும் தொடர்ந்து நிகழுவது கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது.

இதற்குரிய செயல்திட்டத்தை வகுத்துள்ள நமது அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியாரை வரவேற்று அனேவருக்கும் அறிமுகப் படுத்துங்கள். 6.4.92 திங்கள் புறப்பட்டு 7.4.92 செவ்வாய் தஞ்சை வந்து 15.4.92 வரை தஞ்சை மாவட்டம் சுற்றுப்பயணம் செய்யும் ஞாஞச்சாரியாரைப் பயன்படுத்துங்கள்.

உடன் பதில்.

**பதினெண்சித்தர் மடம்.**

<u>மூலம்</u>: பொன்னேரி.

<u>பிறதிகள்:</u>

1. தெய்வத்தமிழ் நிறுவனத்தார், உறுப்பினர்கள்,
2. பெ.சுப்பையா D.M. / C.R.C.,
3. பெரும்புலியூர் நக்கீரன்,
4. அம்மாப்பேட்டை கிருட்டிணமூர்த்தி,
5. இராசை குமார்,
6. மல்லூர் அரங்கநாதன்,
7. வேம்பை வெங்கடேசன்,
8. சூலூர் மூர்த்தி,
9. சிறுமுகை இராமசாமி,
10. நாகேசு - பாபநாசம்,
11. பண்ணை சொக்கலிங்கம்,
12. சந்திரா நடராசன்.

**//உண்மை நகல்//**

**// மூலம்: சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்திட்ட அஞ்சலின் நகல். //**

**<u>27.5.92இல் நிகழ்ந்த பயிற்சி முகாமில் குருதேவர் அருளியது.</u>**

<u>சுக்கில பட்சம்</u>:-
பட்சம் <= பக்கம்;
சுக்கிலம் <= சுத்தம் <= வெள்ளை, வெண்மை;
அமாவாசை முதல் முழுநிலவு வரை வளர்பிறை => வெண்மைப் பக்கம்.

<u>கிருஷ்ணபட்சம்</u>:-
பட்சம் <= பக்கம்;
கிருஷ்ணம் <= கருப்பு;
முழுநிலவு முதல் அமாவாசை வரை தேய்பிறை => கருப்புப் பக்கம்.

தமிழிலிருந்து சமசுகிருதத்தில் (Sanskrit) மொழி பெயர்த்தது.

# இ.மு.க. ஒரு சமுதாயச் சீர்திருத்தக் கழகம்

பதினெண்சித்தர் மடம்,
தலைமைப்பீடம்,
4-4-92.

பெறுநர்:-

அருள்மிகு பாபநாசம் பெரியவாள், பரமாச்சாரியார்,
ஏமகோடிப் பீடம், அறுதிசங்கராச்சாரியார் சன்னிதானம்,
சித்தரடியார் நாகேசு அவர்களுக்கு,

இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், பதினெண்சித்தர் மடாதிபதி, குவலய குருபீடம் எழுதிக் கொள்வது:

1) யாவும் நலமாகட்டும், வெற்றியாகட்டும், உண்மையாகட்டும், நன்மையாகட்டும்.

2) தங்களுக்கும், தங்களது குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எல்லா வகையான அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்புகளும் கிடைக்கட்டும்.

3) எதிர்பாராத பூசைகளின் காரணமாக யாம்; ஏப்ரல் 6ஆம் தேதி திங்கட்கிழமை இரவு சென்னையிலிருந்து புறப்படுவதாக இருந்த தஞ்சை மாவட்டச் சுற்றுப்பயணத்தை ஏப்ரல் 8 புதன்கிழமை இரவு புறப்படுவதாக ஒத்திப் போட்டிருக்கிறோம். எனவே, யாம் ஏப்ரல் 9ஆம் தேதி வியாழக்கிழமை காலையில்தான் தஞ்சாவூர் வருவோம்.

அதற்கேற்ப நமது தஞ்சாவூர் சுற்றுப்பயணத் திட்டங்களைத் தீட்டிக் கொள்ளவும்.

4) அன்பு மகனே, என் மீது உள்ள அளப்பரிய பாசத்தினாலோ, பற்றினாலோ அரசியல்வாதிகளைப் போல் வீணான ஆடம்பரங்களையோ, ஆரவாரங்களையோ செய்ய வேண்டாம்.

<u>**குறிப்பு:-**</u> ஊர்வலத்திற்கு செவ்வாடை அணிந்தவர்களும், செங்கொடி ஏந்தியவர்களும் எல்லா வகையினராகவும், எல்லா வயதினராகவும் எண்ணற்று இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளுங்கள். அதுதான் நமக்கு வெற்றி! அதுதான் நமக்கு வெற்றி! அதுதான் நமக்கு வெற்றி!

5) அன்பு மகனே! <u>கிராமம் கிராமமாக ஊர் ஊராக நமது தாழ்த்தப் பட்டவர்கள் வாழ்ந்தும் கூட நமக்கிடையில் நாடு தழுவிய ஒற்றுமையோ!; ஒருமைப்பாடோ!; ஒருங்கிணைப்போ!; ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவே இல்லை.</u> ஏனென்றால், நம் நாட்டு அரசியல்வாதிகளும், சமயவாதிகளும், சமுதாயவாதிகளும் நம்மை வீழ்த்தப்பட்டவர்களாகவே வைத்திருக்கிறார்கள். அதாவது, நம்மைச் சிந்திக்கத் தெரியாத கைப்பொம்மைகளாக வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டேயாக வேண்டும், அல்லது ஏற்படுத்தப்பட்டேயாக வேண்டும். இதற்காகவேதான் யாம், இந்து முன்னேற்றக் கழகத்தை (இ.மு.க. I.M.K.) உருவாக்கியிருக்கிறோம்.

6) அதாவது, யாம் சுற்றுப்பயணம் வரும்போது நமது வீழ்த்தப்பட்டவர்களின் குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும், பெரியவர்களுக்கும் புரட்சிகரமான புதுமைப் பெயர்களை வைக்கும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

7) இதேபோல், நம் தாழ்த்தப்பட்ட மக்களில் பலருக்கு சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், பண்டாரம், பண்டார சந்நதி, பண்டார

சந்நிதி, ஆச்சாரியார், .... முதலிய 48 வகையான அருட்பட்டங்களை வழங்கி அருளுலகில் பெரியவர்களாக, பத்தியாளர்களாக, சத்தியாளர்களாக, சித்தியாளர்களாக, முத்தியாளர்களாக, மகான்களாக, ஞானிகளாக, தவசிகளாக மாறுவதற்குரிய பயிற்சிகளை வழங்குவதற்குரிய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள், நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள், நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

8) அன்பு மகனே, இத் திருநாட்டில் வீழ்த்தப்பட்டவர்களாகித் தாழ்த்தப்பட்டவர்களாக வாழும் நம்மவர்கள் குடியிருக்கும் பகுதிகளிலுள்ள கோயில்களுக்குப் புத்துயிர்ப்புச் செய்வோம், புத்துயிர்ப்புச் செய்வோம், புத்துயிர்ப்புச் செய்வோம். அதாவது நம்மவர்களுக்கிடையில் திருவருட்செல்வர்களும், ஆன்மீகவாதிகளும், அருட்பா கொண்டல்களும், அருள்வழங்கு நாயகங்களும், முக்காலக் கணிச்சிகளும், கணிப்பாளர்களும், சாத்திரியார்களும், தோத்திரியார்களும், கருவிலேயே திருவுடையார்களாகத் தோற்றுவிக்கப் படுவதற்கு உரிய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள், ஏற்பாடு செய்யுங்கள், ஏற்பாடு செய்யுங்கள்.

9) அதாவது நமது தாழ்த்தப்பட்ட மக்கள் வாழுகின்ற பகுதிகளில் எல்லாம் யாகசாலை வைத்து சித்தர் கருவூரார் அருட்கோட்டங்களை உருவாக்க வேண்டும். அதன்மூலம், சித்தர் கருவூரார் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை உருவாக்க வேண்டும். இதற்காக சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மையங்களை உருவாக்க வேண்டும்.

**குறிப்பு:-** சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றத்திற்கு ஆயுள் சந்தாவே ரூ.3/-தான். எனவே, நமது வீழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் சிறுவர் முதல் பெரியவர் அனைவரும் இந்த சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றத்தில் உறுப்பினர் ஆக வேண்டும். சுமார் பதினெட்டு பேர்கள் சேர்ந்தால் ஒரு சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றக் கிளையை உருவாக்கிக் கொள்ளலாம். இப்படி ஒவ்வொரு ஊருக்கும்

பல கிளைகளை உண்டாக்கிக் கொள்ளலாம். அப்பொழுதுதான், நமது சமுதாய மாற்றப் புரட்சிக் கருத்துக்களும், எண்ணங்களும், உணர்வுகளும், சிந்தனைகளும் முறையான நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களில் வளரும், வளரும், வளரும். இதைப் புரிந்து செயல்படுத்து.

அதாவது, சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றக் கிளை அலுவலகங்கள் நமது தாழ்த்தப்பட்டோரின் பகுதிகளில் ஒவ்வொரு பகுதிக்கும் பத்துப் பன்னிரண்டு கிளைகள் அல்லது கிளை அலுவலகங்கள் என்று துவக்கிடும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள். எனவே, இந்த அஞ்சலை உடனடியாக நமது உற்றூர் உறவினர்களிடம் படித்துக் காட்டி யாம் நமது வட்டாரத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் வர ஏற்பாடு செய்யுங்கள், செய்யுங்கள், செய்யுங்கள், செய்தே ஆக வேண்டும்.

10) அன்பு மகனே! நமது இந்தியத் துணைக்கண்ட விடுதலைக்குப் பிறகு நமது அரசியல் கட்சிகளின் தொண்டர்களும், தலைவர்களும், நமது சமுதாயக் கட்சிகளின் தொண்டர்களும், தலைவர்களும், நமது தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களைத் தங்கள் தங்கள் விருப்பம் போல் சதுரங்க விளையாட்டுக் காய்கள் போல் பயன்படுத்தி விட்டார்கள். எனவே, நாம் மிக விரைவில் அரசியல் துறைகளிலும், சமுதாயத் துறைகளிலும், சதுரங்க விளையாட்டுக் காய்களை நகர்த்தும் தலைவர்களாகவும், தொண்டர்களாகவும் உருவாகியே தீர வேண்டும், உருவாகியே தீர வேண்டும், உருவாகியே தீர வேண்டும்.

இதற்காகத்தான் <u>‘இந்து முன்னேற்றக் கழகம்’ ஒரு சமுதாயச் சீர்திருத்தக் கழகமாகவும், ஓர் அரசியல் சீர்திருத்தக் கழகமாகவும் ஒருங்கிணைந்த முயற்சியினைச் செய்யும் புரட்சிக் கழகமாக; புதுமைக் கழகமாக; அருள்நெறிக் கழகமாக; அன்புநெறிக் கழகமாக; பண்பாட்டு வளர்ச்சிக் கழகமாக; நாகரிக மறுமலர்ச்சிக் கழகமாக; கலையுலகப்</u>

புரட்சிக் கழகமாக; மொழி வழிப் புரட்சிக் கழகமாக, .... உருவாக்கப் பட்டிருக்கிறது, உருவாக்கப் பட்டிருக்கிறது, உருவாக்கப் பட்டிருக்கிறது.

**குறிப்பு:-**

இந்த இ.மு.க.வில் (I.M.K.) ஆயுள் சந்தாவாக ரூ.2/- மட்டும் கட்டி உறுப்பினராகச் சேர்ந்தால் போதும்; அதாவது ஒரே ஒரு முறை ரூ.2/- மட்டும் சந்தா கட்டி உறுப்பினராகச் சேர்ந்தால் போதும். இப்படிச் சேருகின்றவர்களில் குறைந்தது பதினெட்டு (18) பேர்கள் சேர்ந்தால் போதும் ஓர் இ.மு.க. கிளை அலுவலகத்தை தோற்றுவித்து விடலாம். இப்படி ஒரே தெருவில் கூட ஏழெட்டு, பத்து இ.மு.க. கிளை அலுவலகங்கள் உருவாக்கப்படலாம், உருவாக்கப்படலாம், உருவாக்கப்படலாம். எனவே, யாம் வரும்பொழுது நமது தாழ்த்தப்பட்டவர்களின் குடியிருப்புகளில் உள்ள ஒவ்வொரு தெருவிலும் ஒருசில இ.மு.க. கிளை அலுவலகங்களைத் திறந்தே ஆகவேண்டும்.

அதாவது, ஒவ்வொரு தெருவிலும் நமது இ.மு.க.வின் கொடிகள் பல ஏற்றப்படுவதற்குரிய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள், ஏற்பாடு செய்யுங்கள், ஏற்பாடு செய்யுங்கள். ஒவ்வொரு தெருவிலும் நமது இ.மு.க.வின் கொடிகள் பல ஏற்றப்படுவதற்குரிய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள், ஏற்பாடு செய்யுங்கள், ஏற்பாடு செய்யுங்கள்.

11) யாம் முதலில் கூறியது போல் (அ) சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றம், (ஆ) சித்தர் கருவூரர் அருட்கோட்டம் (யாகசாலை உள்ளது), (இ) சித்தர் கருவூரர் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம் எனும் மூன்று அமைப்புக்களும் நமது வீழ்த்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் ‘தனிமனித வாழ்வு’, ‘குடும்ப வாழ்வு’ எனும் இரண்டை மட்டும் முறையாகச் செப்பனிட்டுப் புதிய தெம்பும், தெளிவும், திரமும், திறமும், தரமும், உரமும், ஆட்சிப் பண்பும் உடையனவாக்கிடுவதற்காகவே தோற்றுவிக்கப்பட்டவைகளாகும்.

எனவேதான், இந்த மூன்றிற்குமாகச் சேர்த்து ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ (இ.ம.இ. I.M.I.) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த இ.ம.இ.க்கும், இ.மு.க.விற்குரிய மெய்ஞ்ஞானக் கொடியேதான் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, நமது சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றக் கிளை அலுவலகங்களிலும், யாகசாலையை உடைய சித்தர் கருவூரார் அருட்கோட்டங்களிலும், சித்தர் கருவூரார் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களிலும் நமது இ.ம.இ.க்கும், இ.மு.க.வுக்கும் உரிய மெய்ஞ்ஞானக் கொடிகள் ஏற்றப்பட்டாக வேண்டும்! மெய்ஞ்ஞானக் கொடிகள் ஏற்றப்பட்டாக வேண்டும்! மெய்ஞ்ஞானக் கொடிகள் ஏற்றப்பட்டாக வேண்டும்! மெய்ஞ்ஞானக் கொடிகள் ஏற்றப்பட்டேயாக வேண்டும். எனவே, இதற்குரிய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

12) சித்தர் கருவூரார் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையத்தில் ரூ.1/- ஆயுள் சந்தாவாகக் கட்டினால் போதும், அல்லது சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றத்தில் ரூ.3/= ஆயுள் சந்தாவாகக் கட்டி உறுப்பினராகச் சேர்ந்தால் போதும், அல்லது சன்னிதானமாகப் பட்டம் பெற்று ரூ.11¼/- உறுப்பினர் தொகையாகக் கட்டி யாகசாலை உடைய சித்தர் கருவூரார் அருட்கோட்டத்தில் உறுப்பினரானால் போதும்; அல்லது ரூ.25/- உறுப்பினர் சந்தாவாகக் கட்டி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் உறுப்பினரானாலும் போதும்; நமது வீழ்த்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் தனிமனித வாழ்வையும், குடும்ப வாழ்வையும் செம்மைப்படுத்துவதற்குரிய புரட்சிகரமான புதுமையான புதியபுதிய நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களை நாடு முழுவதும் உண்டாக்குவோம், நாடு முழுவதும் உண்டாக்குவோம், நாடு முழுவதும் உண்டாக்குவோம். அவற்றில் போதகர்களாகவும், சாதகர்களாகவும் செயல்படுவதற்குரிய ஆச்சாரியார்களைப் பதினெண்சித்தர் மடத்திலிருந்து அனுப்புவோம், அனுப்புவோம், அனுப்புவோம்.

13) அதாவது, அன்பு மகனே, நமது இ.ம.இ.யும், இ.மு.க.வும் சேர்ந்து நம்நாட்டு மக்களில் வீழ்த்தப்பட்டவர்களாகவும், தாழ்த்தப்பட்டவர்களாகவும் இருப்பவர்கள் முதல் மேட்டுக்குடி மக்களாக உயர்மட்டத்தில் இருப்பவர்கள் வரை தங்களைப் புரிந்து பதினெண்சித்தர்களுடைய இந்து வேத வழியாகவும், இந்துமத நடைமுறை வழியாகவும் பண்பாட்டுப் புரட்சிக்கு உரிய பயிற்சிகளையும், முயற்சிகளையும் பெறுவார்கள். (A Training for a Cultural Revolution will be given by the I.M.K. and I.M.I.)

14) இப்படி நமது இ.மு.க.வும், இ.ம.இ.யும் உருவாக்கும் பண்பாட்டுப் புரட்சி நாம் உருவாக்கும் வார வழிபாட்டு மன்றம், அருட்கோட்டம், அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம் முதலிய இ.ம.இ.யின் நிறுவன நிர்வாகங்களும்; இ.மு.க.வின் சமுதாய அரசியல் நிறுவன நிர்வாகங்களும் முழுமுயற்சியாக ஒன்று கூடி ஒற்றுமையுடன் செயல்படுவதன் மூலம்தான் 'முழுமையான பண்பாட்டுப் புரட்சி'யாக மலரும், மலரும், மலரும். (The different Institutions and Divisions OR the separate wings of the I.M.K. and I.M.I. can alone metamorphose the cultural change into the Total Cultural Revolution. Note: metamorphose = உருமாற்றுதல்).

எனவே, அன்பு மகனே! யாம் ஏப்ரல் 8ஆம் தேதி புதன்கிழமை இரவு 9:40 மணிக்கு சென்னையில் புறப்பட்டு மறுநாள் வியாழக்கிழமை நேராகத் தஞ்சாவூர் வந்து சேருகிறோம் என்பதை அறிந்து; யாம் தஞ்சை மாவட்டம் முழுவதும் அல்லது கிழக்கு மண்டலம் முழுவதும் உள்ள நமது வீழ்த்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்புகளில் இ.ம.இ.க்கும், இ.மு.க.வுக்கும் மெய்ஞ்ஞானக் கொடியினை ஏற்றி; இ.மு.க.விற்கும், இ.ம.இ.க்கும் எண்ணற்ற கிளை அலுவலகங்களைத் திறப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.

15) அன்பு மகனே! கிழக்கு மண்டலத்தவரின் வேண்டுகோளின்படிதான்; யாம், குறைந்தது ஒரு வார காலத்திற்கு மேலேயே அவ்வட்டாரங்களில் சுற்றுப்பயணம் செய்து இ.ம.இ., இ.மு.க. நிறுவன நிர்வாகங்களேயும், இவற்றின் கிளே அலுவலகங்களேயும் உருவாக்குவதற்கென்றே வருகிறோம். இதைப் புரிந்து பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

16) அன்பு மகனே! நமது ஒவ்வொரு கிளே அமைப்பிலும், (1) தலேவர், (2) இணேத் தலேவர், (3) துணேத் தலேவர், (4) செயலாளர், (5) இணேச் செயலாளர், (6) துணேச் செயலாளர், (7) பொருளாளர், (8) இணேப் பொருளாளர், (9) துணேப் பொருளாளர், (10) அமைப்பாளர், (11) இணே அமைப்பாளர், (12) துணே அமைப்பாளர் என்று பன்னிரண்டு பதவியினர்கள் உண்டு. இவர்களுக்குத் துணேயாகக் குறைந்தது ஆறு உறுப்பினராவது ஒவ்வொரு கிளேயிலும் இருக்க வேண்டும். எனவே, ஒவ்வொரு கிளே அமைப்பிலும், 18 உறுப்பினர்களாவது கட்டாயம் இருக்க வேண்டும் என்ற சட்டம், விதி வகுக்கப்பட்டுள்ளது.

17) அன்பு மகனே! மிக விரைவில் நமது கிளே அலுவலகப் பதவியினர்களுக்கு (The Office-bearers of the Branch Offices of the I.M.K. and I.M.I.) அந்தந்த வட்டம், வட்டாரம், மாவட்டம், மாநிலம் என்ற அளவில் பயிற்சி முகாம்களும் (Training Centres), கருத்துப் பரிமாற்றச் சிந்தனே அரங்குகளும் (The Mien Camps of the Siddha Philosophy; Mien = நடைமுறைப் பண்பாடு, நிகழ்காலச் சமுதாய வாழ்வு) நிகழ்த்தப்படும், நிகழ்த்தப்படும், நிகழ்த்தப்படும்.

18) அன்பு மகனே! நாம், நமது செயல்கள் அனேத்தையும் அன்பு வழியில், அருள் வழியில், அற வழியில், அமைதி வழியில், சமாதானப் போக்கில், விஞ்ஞானச் சூழலில், பகுத்தறிவு அணுகுமுறையில்தான் நிகழ்த்துவோம், நிகழ்த்துவோம், நிகழ்த்துவோம்.

மற்றவை நேரில்.

இந்த அஞ்சலை நம்மவர் அனைவருக்கும் படித்துக் காட்டு, படித்துக் காட்டு, படித்துக் காட்டு.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்.

**அன்பு தலைவர்,**
**குருதேவர், ஞானத் தந்தை,**
**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,**
**பதினெண்சித்தர் மடாதிபதி,**
**அம்பத்தூர், சென்னை - 53.**

**//உண்மை நகல்//**
**// மூலம்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. //**

**<u>27.5.92இல் நிகழ்ந்த பயிற்சி முகாமில் குருதேவர் அருளியது.</u>**

நமச்சிவாய (6 எழுத்துக்கள்) = ஆறுகாலத் தொழுகை; ஐந்து வேளைகளோடு ஒரு வேளை இரவு 11.00 முதல் 1.30.

நமாஸ் = நமசிவாய (5 எழுத்துக்கள்) = ஐந்து காலத் தொழுகை (முஸ்லீம்);

5 வேளை தொழுதல் X 8 திசை = 40 நாள் ரம்ஜான்;

5 வேளை தொழுதல் X 8 திசை = 40 நாள் மலையில் இயேசு தனித்திருந்தார்;

6 காலத் தொழுதல் X 8 திசை = 48 தமிழர்களுடையது.

<u>மெக்கா</u>:- சிவலிங்கம். அதைச் சுற்றி கற்கள் நீள் செவ்வக வடிவில் நீளமாக உயரமாகக் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொருவராக முத்தமிட்டபடி செல்வர்.
மெக்கா => மக்கா => மகேசுவரன் பட்டினம்.

# தமிழைப் பற்றிய ஒரு மின்னல்
# கீற்று வரலாற்றுச் செய்தி

பதினெண்சித்தர் மடம்,
அம்பத்தூர்,
4-4-92.

பெறுநர்:-

பகுத்தறிவுப் பாசறை மறவர்,
சுயமரியாதை இயக்கப் பாரம்பரிய மாவீரர்,
தமிழ்மொழிப் பற்றும், இன உணர்வும் மிகுதியாக உடைய
பொதுநலத் தொண்டர், சு(ஸ்)டாலின் செகதீசு அவர்களுக்கு;

பதினெண்சித்தர் மடாதிபதி விடுத்துக் கொள்ளும் செயல்நலம் பாராட்டுத் திருவோலை.

1. அஞ்சாநெஞ்சமும், சிந்தைத் துணிவும் குன்றுமல் குறையாமல் தமிழ்மொழிக்காகவும், தமிழினத்திற்காகவும் சுயமரியாதை வழியில் செயல்பட்டிட்ட மாவீரரின் திருமகனே! தாங்கள் தங்களுடைய தந்தையாரின் பெயர் தஞ்சை மாவட்ட சுயமரியாதை இயக்க வரலாற்றிலும், பகுத்தறிவு இயக்க வரலாற்றிலும் நிலையான புகழைப் பெற வேண்டிய ஒன்றுகும். ஆனுல், தஞ்சை மாவட்டத்தவர்களால் கூட நினைவுபடுத்திக் கொள்ள முடியாமல், இருந்த இடம் தெரியாமல் இருக்கிறது. இதுபோலத்தான், தஞ்சை பன்னீர்செல்வம், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, குத்தூசி குருசாமி, தூத்துக்குடி சாமி, திருநெல்வேலி சொக்கலிங்கம், திருப்பத்தூர் கோவிந்தசாமி, சேலம் சித்தன் இராமசாமி, வேலூர் திருநாவுக்கரசு முதலியார், டார்பிடோ சனுர்தனன், திருச்சி பிரான்சிசு, திருவரங்கம் குப்தா .... என்று நூறு பேருக்கு மேல்

பட்டியலிட்டுக் காட்டலாம். இவர்களுடைய வாரிசுகளும் தங்களைப் போல்தான் வெளியுலகத்திற்குத் தெரியாமல் இருக்கிறீர்கள். இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டேயாக வேண்டும்.

2. அதாவது, தங்களுடைய தந்தையாரைப் போல் பொதுத் தொண்டு, சமூகத் தொண்டு, இனத் தொண்டு, மொழித் தொண்டு .... முதலியவைகளை செய்தவர்களின் வாரிசுகளும், தந்தையைப் போலவே பணியாற்றுவதற்கு உரிய வாய்ப்புகளும், வசதிகளும் தாராளமாக வழங்கப்பட்டேயாக வேண்டும், தாராளமாக வழங்கப்பட்டேயாக வேண்டும், தாராளமாக வழங்கப்பட்டேயாக வேண்டும். அது நிகழவில்லை என்கின்ற போது உங்களைப் போன்று தன்னம்பிக்கையுடனும், துணிச்சலுடனும், தனித்தன்மையுடனும் எதற்கும் தயங்காது, மயங்காது செயல்படுபவர்களாக எல்லோரும் தயாராக வேண்டும். எனவே, தாங்கள் தங்களுடைய பொருளாதார வசதிகளுக்கேற்ப தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு முதலிய வட்டாரங்களில் வாழ்ந்திட்ட தங்களின் தந்தையின் சமகாலத்திய சுயமரியாதைச் செயல்வீரர்கள், பகுத்தறிவுப் பாசறைச் செயல்வீரர்கள் .... முதலியவர்களுடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பைத் தயாரியுங்கள். அவற்றை வெளியிடுவோம். ஏனென்றால் நம் நாட்டில், பொதுவாழ்வில் செயல்பட்ட தனிமனிதர்களின் வரலாறுகள்தான்; நிகழ்காலப் பொது வாழ்க்கைச் செயல்வீரர்களுக்கும், வருங்காலப் பொது வாழ்க்கைச் செயல்வீரர்களுக்கும் படிக்கட்டுக்களாக இருக்கும் (ஏணிப்படிகளாக இருக்கும்).

3. தங்களைப் பொதுவாழ்வில் ஈடுபடுமாறு தொடர்ந்து யாம் வேண்டிக் கொள்வதற்குக் காரணம் இன்றைய நமது நாட்டின் நிலை மிகமிக மோசமானதாக, மோசடியானதாக இருக்கிறது. எனவே, இதைச் சரி செய்வதற்குப் பொதுவாழ்வில் தங்களைப் போன்று பாரம்பரியம் உள்ளவர்கள் ஈடுபட்டேயாக வேண்டும்.

4. இன்றைக்கு நம் நாட்டிலுள்ள பெரியபெரிய கட்சிகள் முதல் சின்னஞ்சிறு கட்சிகள், சங்கங்கள், சபைகள், மன்றங்கள், குழுக்கள், ... முதலியவற்றின் தலைவர்களும் சரி, தொண்டர்களும் சரி, மிகமிகக் குறுகிய கண்ணோட்டத்தையும், முரட்டுப் பிடிவாதத்தையும், வறட்டுப் போக்கையும், தான் என்ற அகம்பாவ ஆணவ அணுகுமுறைகளையும் பெரும்பாலும் பெற்றிருக்கிறார்கள், பெரும்பாலும் பெற்றிருக்கிறார்கள், பெரும்பாலும் பெற்றிருக்கிறார்கள். அதாவது, மேலே குறிப்பிட்டது போல் சிறிய பெரிய நிறுவன நிர்வாகங்களைச் சேர்ந்த தலைவர்களும் சரி, தொண்டர்களும் சரி, தங்களுக்கென்று ஒரு கூட்டம் இருக்க வேண்டும்; தங்களுக்கென்று தனிப்பட்ட அளவில் புகழும், பதவியும், பொழுதுபோக்கும் இருக்க வேண்டும்; எக்காரணத்தைக் கொண்டும் தங்களின் அமைப்பு வேறு எந்த மற்றொரு அமைப்புடனும் சேர்ந்து விடக்கூடாது ... என்ற எச்சரிக்கை உணர்விலேதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், மேற்படி சிறிய பெரிய நிறுவன நிர்வாகங்களின் பெரும்பாலான தலைவர்களும், தொண்டர்களும், தங்களுடைய நிர்வாகம் தனித்தே இருக்க வேண்டும் என்பதற்காக; அடிக்கடி மற்ற நிறுவன நிர்வாகங்களுடன் சண்டைச் சச்சரவுகளையும், போட்டாபோட்டிப் போராட்டங்களையும் காரணகாரியமில்லாமல் உருவாக்கிக் கொண்டும், வளர்த்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

5. எனவேதான், நமது நாட்டில் சமுதாய அளவில் ஒற்றுமையோ! ஒருமித்த தலைமையோ! நிலையான கட்டுக்கோப்போ! தெளிவான வழிகாட்டலோ! வலிமையான வழித்துணையோ! ஏற்பட முடியவில்லை! ஏற்பட முடியவில்லை! ஏற்பட முடியவில்லை! ஏற்படவே முடியவில்லை. தமிழ்மொழிக்கென்று முறையான, முழுமையான, வளமான, வலிமையான நிறுவன நிர்வாகம் எதுவுமே ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவேயில்லை. இதேபோலத்தான், தமிழ் இனத்திற்கென்றும், தமிழர் மதத்துக்கென்றும், தமிழர் பண்பாட்டுக்கென்றும், தமிழர்

நாகரிகத்திற்கென்றும், தமிழரின் தொழில் துறைகளுக்கென்றும், தமிழரின் கலைத் துறைக்கென்றும், தமிழரின் இலக்கியத் துறைக்கென்றும், .... தனித்தனியாக வளமும், வலிமையும், தனித்தன்மையும், செல்வாக்கும், செயலூக்கத் தரமும், திரமும், திறமும், வீரமும், தீரமும், உரமும், அறமும், மறமும் ... உடைய நிறுவனங்களோ! நிர்வாகங்களோ! தலைவர்களோ! மற்ற இனத்தாருக்கும், மற்ற மொழியாருக்கும் இருப்பது போல் ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவேயில்லை.

6. எனவேதான், உலக அளவில் அருள் துறையில் ஈடு இணையற்ற பேரிலக்கியங்கள் என்று சொல்லக் கூடிய மூவர் தேவாரங்கள் மிகப் பெரிய இழப்புக்களைப் பெற்றன. அதாவது, திருஞானசம்பந்தரின் பாடல்கள் பதினாறாயிரம் (16,000) திருப்பதிகங்கள் என்று மிகப் பெரிய அளவில் முறையாக எண்ணிக்கையிடப்பட்டு பட்டியலிட்டுக் காட்டப்பட்ட போதிலும், இன்றைக்கு நமக்குக் கிடைப்பவை முன்னூற்று எண்பத்துநான்கு (384) திருப்பதிகங்கள்தான். அதாவது, அவர் பாடிய திருப்பதிகங்களில் நூற்றுக்கு இரண்டு (2%) என்ற விகிதத்தில்தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அப்படியென்றால், அவருடைய திருப்பதிகங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுத் திருப்பதிகங்கள் அழிந்துள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன; ஒழிந்துள்ளன, அல்லது ஒழிக்கப் பட்டுள்ளன. அதாவது, நமது கடவுள் தமிழுக்கு! நமது தெய்வத் தமிழுக்கு! நமது தேவத் தமிழுக்கு! நமது வேதத் தமிழுக்கு! அன்றிலிருந்து இன்று வரை பாதுகாப்பில்லை, பாதுகாப்பில்லை, பாதுகாப்பில்லை, பாதுகாப்பேயில்லை.

நமது கடவுள் தமிழின் உரிமையும், பெருமையும், நமது தெய்வீகத் தமிழின் உரிமையும், பெருமையும்; நமது தேவத் தமிழின் உரிமையும், பெருமையும்; நமது வேதத் தமிழின் உரிமையும், பெருமையும், .... நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பங்கு (98%) நமது மொழி, இன, பண்பாட்டு, நாகரிக, மத விரோதிகளாலும், துரோகிகளாலும் காட்டுமிராண்டித்தனமாகத் தொடர்ந்து சிதைத்துச் சீரழிக்கப்பட்டு

வருகின்றன; சிதைத்துச் சீரழிக்கப்பட்டு வருகின்றன; சிதைத்துச் சீரழிக்கப்பட்டு வருகின்றன.

7. இதேபோலத்தான் அப்பர் எனப்படும் திருநாவுக்கரசர் பெருமான் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் மொத்தம் நாற்பத்தொன்பதாயிரம் (49,000). ஆனால், இன்றைக்குக் கிடைப்பனவோ முன்னூற்றுப் பன்னிரண்டு (312) திருப்பதிகங்கள்தான். அதாவது, சுமார் இருநூறு பாடல்களுக்கு ஒரு பாடல்தான் (0.5%) மிஞ்சியிருக்கின்றது. மீதி 199 பாடல்கள் தமிழின, மொழி, மத விரோதிகளாலும், துரோகிகளாலும் அழித்தொழிக்கப் பட்டிருக்கின்றன, அழித்தொழிக்கப் பட்டிருக்கின்றன, அழித்தொழிக்கப் பட்டிருக்கின்றன.

8. இதைப்போலவே, கடவுளாலேயே தோழர் என்று பாராட்டப் பெற்ற சுந்தரமூர்த்தி நாயனார் அவர்கள் பாடிய முப்பத்தெட்டாயிரம் (38,000) திருப்பதிகங்கள். ஆனால், அவற்றுள் நூற்றியொன்று (101) திருப்பதிகங்கள்தான் எஞ்சியிருக்கின்றன. அதாவது நானூறு பாடல்களுக்கு ஒரு பாடல்தான் (0.25%) மிஞ்சியிருக்கின்றது. இதன்படிப் பார்த்தால் நானூறு பாடல்களில் முன்னூற்றுத் தொண்ணூற்று ஒன்பது பாடல்கள் தமிழின மொழி மத விரோதிகளாலும், துரோகிகளாலும் அழித்தொழிக்கப் பட்டிருக்கின்றன, அழித்தொழிக்கப் பட்டிருக்கின்றன, அழித்தொழிக்கப் பட்டிருக்கின்றன.

9. இப்படி நமது கடவுள் தமிழுக்கே! தெய்வத் தமிழுக்கே! தேவத் தமிழுக்கே! வேதத் தமிழுக்கே! தமிழின மொழி மத விரோதிகளாலும், துரோகிகளாலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு உள்ளேயே மிகப் பெரிய சிதைவுகளும், சீரழிவுகளும் ஏற்பட்டு விட்டன, ஏற்பட்டு விட்டன, ஏற்பட்டு விட்டன என்றால் பல நூறாயிரக்கணக்கான சங்கத் தமிழ்ப் பாடல்களும், பல்லாயிரக்கணக்கான சங்கத் தமிழ் நூல்களும்; பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், 48 வகைச் சித்தர்களும் எழுதிய பல்லாயிரக்கணக்கான,

பல நூருயிரக்கணக்கான சமய, சமுதாய, கலை, இலக்கிய, தொழில், அரசியல் துறைகளைச் சார்ந்த உரைநடை நூல்களும், செய்யுள் நடை நூல்களும், இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும், தமிழின மொழி மத விரோதிகளாலும், துரோகிகளாலும் பெருமளவில் வேட்டையாடப்பட்டு எரித்துச் சாம்பலாக்கப்பட்டு விட்டன என்ற வரலாற்றுச் செய்தி வியப்பானதல்ல, வியப்பானதல்ல, வியப்பானதல்ல; ஆனால் வேதனையானது, வேதனையானது, வேதனையானது. இந்த அளவில் இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, தெய்வீகச் செந்தமிழ் மொழியின் மெய்ஞ்ஞான சபைத் தலைவர், கருகுல ஆதீனம், கருவறை மூலப் பண்டாரம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் என்ற முறையில் யாம் **தமிழைப் பற்றிய ஒரு மின்னல் கீற்று வரலாற்றுச் செய்தி**யை வழங்குகிறோம். இதைச் சொல்லியாவது தாங்கள் தமிழ்மொழியின் பெயரால் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு வகையான நிறுவன நிர்வாகத் தலைவர்களையும், தொண்டர்களையும் ஒன்றுதிரட்டி, ஒற்றுமைப்படுத்தி எம்மை வரவேற்றுப் பொதுக்கூட்டங்கள் நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள், ஏற்பாடு செய்யுங்கள், ஏற்பாடு செய்யுங்கள்.

வெற்றி நமதே! நாளை நமதே!
ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**தலைவர், குருதேவர்,**
**ஞானத்தந்தை, அந்தணர் அண்ணல்,**
**ஞானாச்சாரியார்,**
**4-4-92.**

**//உண்மை நகல்//**
**// மூலம்: சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்திலும், சித்தரடியார் திரு த.செயக்குமார் அவர்களின் கையெழுத்திலும் இருந்த நகல். //**

# Gurudevar's Letter to a Disciple from Andhra

20-6-1992

From

His Holiness Andhanar Annal,
Guru Mahaa Sannidhaanam,
Siddhar Raja Yogi Karuwooraar,
The Indu Veda Paadasalai,
Pathinen Siddhar Madam (Mutt),
The Divine Cure Centre,
The Mystical Treatment Mantralayaa,
13, Kumarasamy Mudali Street, Varadarajapuram,
Ambattur, Madras - 600053, Phone: 654447

To

Mr M. Narendranath Reddy,
C/O, Mr M. V. Ramachandra Reddy,
Singapet (Post), Allur (Mandal),
Nellore (District), Andhra Pradesh,
PIN: 524315.

1. The Madam(Mutt) has received your letter dated June 11, 1992, on June 15, 1992, and it was immediately kept in Poojai.

2. After getting the consent of the Supreme Beings, Gods and Goddesses, Siddhars and the Pathinen Siddhar Peedathipathis and

all other divine beings, today dated 20 June 1992 your letter was brought to the notice of His Holiness Guru Peedam.

3. Guru Peedam listened to the recital of your letter. Your letter was read out four times to the Guru Peedam. That is to say your versions were deeply debated in the divine forum.

4. Now, we need full particulars about your family members' bio-data (the nature of relationship to you should be clearly stated); name, age, qualification, nativity, family gods and goddesses, the hereditary deities of your community, the gods of your personal liking; if possible, the stars of the individuals.

5. We need particulars about your personal life; the co-operation between you and your wife; had she any issues?; now where is she and what is she?

6. If you will furnish all the details required above, we will perform poojas for you and our divine diagnosis will be produced.

**Note:** Here everything will be carried out in a scientific atmosphere with a rationalistic approach. There is no room for superstitions, blind beliefs and wild imaginations. So, we will clearly state that whether your conditions are curable or incurable.

7. My dear beloved divinely adopted son, luckily you have come to the right place at the proper time since here everything is carried out according to the Indhu Vedaas, Sastraas, Indhu traditions, customs and manners strictly. So, all the means and methods have clearly defined procedures. So, you will have a better life and fruitful life.

8. This Madam(Mutt) alone assures each and every individual that they can clearly understand and realise their previous births, rebirths and meaning of this birth.

9. The unique feature of this Guru Peedam, Guru Mahaa Sannidhanam, His Holiness Siddhar Raja Yogi Karuwooraar, the XII Pathinen Siddhar Peedam is the declaration “Let all human beings come; We will make them Gods themselves”. So, unnecessarily you need not worry about your birth and death.

10. The greatness and immortality of the Induism of the Pathinen Siddhars in the divine Tamil language lies in its innumerable mantras, varieties of Poojas, Thavas, Yogas, Yaagas, Omams, Ogaas, Velvis and so on.... to guide and lead people to win over the cycle of birth and death. This is the unique feature of ‘The Siddha Philosophy’ => ‘The Seeva Nery’ (சீவ நெறி) => ‘Siva Nery’ (சிவ நெறி) => ‘Saiva Nery’ (சைவ நெறி) => ‘Saiva Siddhantha’ (சைவ சித்தாந்தம்) => ‘The Indhuism’ (இந்து மதம்) but not the *Hinduism* of the Sanskrit Language (சமசுக்கிருத மொழிக்கு உரிய ஹிந்துமதம் அல்ல)”.

11. My dear Narendranath Reddy! you are an innocent, sacred and divinised soul. Let all your fear, worries, apprehensions, undeciphered mysteries, unknowing longings, mental stresses and physical strains and pains will be eradicated as soon as you enter the spritual reaches of the Pathinen Siddhar Madam(Mutt). But you must assure that your walks and talks of life must be spent in propagating the preachings and teachings of the Siddhar’s Madam(Mutt) and Guru Peedam. Then, you can

really enjoy the values of life and the divine eternal happiness. The Heaven will bestow its blessings on you.

12. The Siddha Philosophy emphasises family life as the best means of all Siddhis, the divine pleasures and treasures, and the blessing of the Heaven. So, you and all of your family members including your wife can enjoy the holy life and take part whole-heartedly in rendering the divine services.

13. Before you start to this Madam(Mutt), you must get the consent of the Guru Peedam, Guru Mahaa Sannidhanam. For that, poojas must be done for you. So, as soon as possible, you send your contribution to the Madam(Mutt) by means of a draft in favour of “The Pathinen Siddhar Madam Trust” payable at Ponneri.

14. Take a xerox copy of this letter and send it to Mr Sundararaman at Rishi Valley. If possible, take this letter in person to him and get his consultation.

Yours in God,

His Holiness Andhanar Annal,
Gnaanaachaariyaar,
Gnala Guru, Siddhar Raja Yogi Karuwooraar.

// True Copy //

**// உண்மை நகல் //**

**// மூலநகல்: சித்தரடியான் சுந்தரராமன் வைத்திருந்த கோப்பில் இருந்து கிடைத்தது. //**

29/10/92 வியாழன் (இரவு 9 மணி முதல் 10 மணி வரை)

# அருளாணைச் செய்திகள்

# ‘நான்வேத வாசகங்கள்’

[நம்மவர்கள் மனப்பாடம் செய்து கொண்டு மேடையிலும், தங்களின் அன்றாட வாழ்விலும் முழக்க வேண்டிய அருளாணை வாசகங்கள்.]

1. இந்துவேதம் வளர்ப்போம்!
2. இந்துமதம் காப்போம்!
3. இந்துவேத வளர்ச்சி எழிச்சி பெறட்டும்!
4. இந்துமத ஆட்சி விழிச்சி பெறட்டும்!
5. இந்துமத நெறி போற்றுவோம்!
6. வேற்று மத வெறி மாற்றுவோம்!
7. தமிழ்மொழியே இந்துவேத மொழி!
8. தமிழ்மொழியே இந்துமதப் பூசைமொழி!
9. நான்கு வேதங்களும் தமிழிலேயே பிறந்தன!
10. ‘இந்து’ என்ற சொல் தமிழ்ச் சொல்லே!
11. ‘இந்துமதம்’ தமிழரின் மதமே!
12. ‘இந்துவேதம்’ பதினெண்சித்தர்கள் அருளியதே!
13. அறுபத்துமூன்று நாயன்மார்களும் தமிழர்களே!
14. பன்னிரண்டு ஆழ்வார்களும் தமிழர்களே!
15. அறுபத்துநான்கு திருவிளையாடலும் தமிழகத்திலேயே!
16. இந்துமத மூலக் கடவுள்கள் தமிழர்களே!
17. இந்துமத மூல ஆச்சாரியார்கள் தமிழர்களே!
18. இந்துமத மூலக் குருபீடங்கள் தமிழர்களே!
19. இந்துமத மூலக் குருமடங்கள் தமிழர்களே!

20. இந்துமத மறை முறை நெறி வேதம் தமிழே!
21. இந்துமத சுருதி ஆரணம் ஆகமம் மீமாம்சை தமிழே!
22. இந்துமத நேம நியம நிடத நிட்டை நீதி விதி தமிழே!
23. இந்துமத நாதம் சித்தம் ஓதம் போதம் தமிழே!
24. இந்துமதப் பூசைமொழி நூல்கள் தமிழே!
25. இந்துமதப் பூசைவிதி நூல்கள் தமிழே!
26. இந்துமதத் தத்துவ நூல்கள் தமிழே!
27. இந்துமதச் செயல்சித்தாந்த நூல்கள் தமிழே!
28. இந்துமதக் கரு வாக்கு வாக்கிய வாசகம் தமிழே!
29. இந்துமதக் குரு வாக்கு வாக்கிய வாசகம் தமிழே!
30. இந்துமதத் தரு வாக்கு வாக்கிய வாசகம் தமிழே!
31. இந்துமதத் திரு வாக்கு வாக்கிய வாசகம் தமிழே!
32. இந்துமத அருள் வாக்கு வாக்கிய வாசகம் தமிழே!
33. இந்துமத மருள் வாக்கு வாக்கிய வாசகம் தமிழே!
34. இந்துமத அத்தர அத்திர அத்திறங்கள் தமிழே!
35. இந்துமத சாத்தர சாத்திர சாத்திறங்கள் தமிழே!
36. இந்துமத சூத்தர சூத்திர சூத்திறங்கள் தமிழே!
37. இந்துமத தோத்தர தோத்திர தோத்திறங்கள் தமிழே!
38. இந்துமத நேத்தர நேத்திர நேத்திறங்கள் தமிழே!
39. இந்துமத வேத்தர வேத்திர வேத்திறங்கள் தமிழே!
40. தமிழரின் உள்ளம் இந்துவேத நாற்றங்கால்!
41. தமிழரின் உள்ளம் இந்துவேத நாற்றுப்பண்ணே!
42. தமிழரின் உள்ளம் இந்துவேத விதைப்பண்ணே!
43. தமிழரின் இல்லம் இந்துமத நாற்றங்கால்!
44. தமிழரின் இல்லம் இந்துமத நாற்றுப்பண்ணே!
45. தமிழரின் இல்லம் இந்துமத விதைப்பண்ணே!
46. தமிழரே இந்துமத மூலவர்கள்!

47. தமிழரே இந்துமத நாயகங்கள்!
48. தமிழரே இந்துமத வித்துக்கள்!
49. தமிழரே இந்துமதச் சொத்துக்கள்!
50. தமிழரே இந்துமதக் காவலர்கள்!
51. தமிழரே இந்துமதக் 'கருவறைகள்'!
52. தமிழரே இந்துமத 'வெட்டவெளிக் கருவறைகள்'!
53. தமிழரே இந்துமத 'வழிபாட்டு நிலையக் கருவறைகள்'!
54. தமிழரே இந்துமத 'கோயில் மூலக் கருவறைகள்'!
55. தமிழரே இந்துமதக் 'குருகுலங்கள்'!
56. தமிழரே இந்துமதத் 'திருகுலங்கள்'!
57. தமிழரே இந்துமதத் 'தருகுலங்கள்'!
58. தமிழரே இந்துமதக் 'கருகுலங்கள்'!
59. தமிழகமே இந்துமதப் பிறப்பிடம்!
60. தமிழகமே இந்துமத வளர்ப்பிடம்!
61. தமிழகமே இந்துமதக் காப்பிடம்!
62. தமிழ்மொழியே கடவுள் மொழி!
63. தமிழ்மொழியே தெய்வமொழி!
64. தமிழ்மொழியே தேவமொழி!
65. தமிழ்மொழியே வேதமொழி!

... ... ... ... ... ... ... ...

*... விரிவஞ்சி இந்த 'நான்வேத வாசகப் பட்டியல்' நிறைவு செய்யப்படுகின்றது.*

**//உண்மை நகல்//**

**// இதன் மூல நகல்: சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

**இந்து முன்னேற்ற கழகம் - அறிவிக்கை எண்: 3333**

**I.M.K. இ.மு.க.**

**இந்து வேதம் வளர்ப்போம்!**

**இந்து மதம் காப்போம்!**

1. குடும்ப தெய்வம், குல தெய்வம், கிராம தேவதை, நாட்டுக் கடவுள் ... புரிந்து பூசை செய்து பயனடைவோம்.
2. முற்பிறப்பு, மறுபிறப்பு, இப்பிறப்பு, ஆவி, ஆன்மா, ஆருயிர், ஊழ்வினை, விதி, ... புரிந்து உரிய பூசைகள் செய்வோம்.
3. மீண்டும் கோயில்களை அருள் ஊற்றுக்களாக்குவோம்.
4. கோயில்களில் பூசை, தவம், வேள்வி, ஓகாசனம், யோகாசனம், குண்டலினி, சேவலோன் போர்க்கலைகள் ... கற்பிக்கும் இந்து வேத பாடசாலைகள் அமைப்போம்.
5. மீண்டும் கோயில் பூசாறி, குரு, குருக்கல், குருமார்... அருட்சினை செய்வதோடு; அனைத்துப் பாதிப்புக்களுக்கும் மந்திரித்து அருள் வழங்கி; முடிகயிறு, தாயத்து, சக்கரம், உருத்திராக்கம் அருளாசியுடன் அளித்திடச் செய்வோம்.
6. முதல் உகத்திலேயே மூலப் பதினெண்சித்தர்கள், அருளாட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளியுள்ள இருக்கு வேதம், யாம வேதம், அசுர வேதம், அதர்வான வேதம் ஓதுவோம்! ஓதுவிப்போம்!! இவற்றின் மூலம் நாக தோசம், செவ்வாய் தோசம், மூல தோசம், ஊழ்வினை, விதி. ... பாதிப்புக்கள் அனைத்தும் அகலச் செய்வோம்; மந்திரவாதிப் பாதிப்புக்கள் அனைத்தையும் தடுத்துப் போக்கிடுவோம்.
7. கடவுள்களைச் சந்தித்துப் பழகி வாழ்ந்திட்ட நாயன்மார்களும், ஆழ்வார்களும் அருளிய போதனைகளையும், சாதனைகளையும் புரிந்து பயன்படுத்தி உய்வடைவோம்.

**வாரீர்! வாரீர்!! வாரீர்!!!**

**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,**
**இந்து வேத நாயகம், இந்து மதத் தந்தை,**
**இந்து மதத்தின் தலைமை ஆச்சாரியக் குருபீடம்.**
**இந்து வேத பாடசாலை, பதினெண்சித்தர் மடம்.**

**27.5.92இல் நிகழ்ந்த பயிற்சி முகாமில் குருதேவர் அருளியது.**

உச்சாடணம் = உச்சி ஆடணும்; மந்திரம் சொல்லும் போது உச்சியில் Vibrations வர வேண்டும். அதாவது, வாய்விட்டுச் சொன்னால்தான் தலை உச்சியில் அதிர்வுகள் உண்டாகும். அதுதான் மந்திர உச்சாடணம்.

மார்கழி மாதத்திற்கான பாடல்கள், ஆண்டாள் பாடியவை தமிழில் உள்ளன. காசுமீர் முதல் குமரி வரை பெருமால் கோவிலில் தமிழ்ப் பாடல்தான் பாடப்படுகின்றது. திருப்பதியில் தமிழ்ப்பாடல்தான் வெங்கடாசலபதிக்கு கருவறையில் பாடப்படுகின்றது.

இசுலாமியர்கள் கூறும் பிஸ்மில்லா என்பதின் பொருள் தமிழில்தான் உள்ளது:= ஈசுவரா, எல்லா.
பாண்டி முனீசுவரர் தாத்தா கோயிலில் ஆடு அறுத்தலின்போது கூறுவது:= ஈசுவர எல்லா

அஃபா, இஃபா, உஃபா, எஃபா, ஒஃபா, கஃபா, சஃபா, தஃபா, பஃபா, மஃபா, நஃபா, வஃபா
**= 12 இராசிகள்**

போரில் இறப்பவர்,
வீர சொர்க்கம் அடைந்தவர் = **பட்டவர்**.
நம்மை ஆண்ட அரசர்
கடவுள்கள் ஆதல் = **ஆண்டவன்.**
(சண்டை, சச்சரவு, பூசல் ஆகிய) அனைத்தையும் கடந்து உள்ளத்துக்குள் வாழ்பவர் = **கடவுள்.**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

"... The greatness and immortality of the Indhuism of the Pathinen Siddhars in the divine Tamil language lies in its innumerable Prayer verses, varieties of Prayer procedures, and so on.... to guide and lead people to win over the cycle of birth and death. This is the unique feature of 'The Indhuism'..."

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-